15th March 1956]

SRI K. VINAYAKAM: Is the Hon. Minister aware of the fact that no person can be arrested or prosecuted on the strength of a mere petition unless there is law supporting such kind of prohibition of burying dead bodies in the area in question which has been used as a burial ground for a long time? What alternative arrangements the Government have made for burying dead bodies in that ward?

THE HON. SRI A. B. SHETTY: There is no suitable ground to be used as a burial ground in that particular ward. But in Ward No. 1, a burial ground for the exclusive use of Muslims has been given.

SRI K. P. KUTTIKRISHNAN NAYAR: Are the Government aware that this dispute arose out of a civil suit by two parties and that the Municipality had nothing to do with these arrests and other things?

THE HON. SRI A. B. SHETTY: That may be, Sir. My hon. Friend was the Municipal Chairman for some time and he must have better knowledge of this matter.

SRI K. KUNHI MOHAMED SHAFEE: Is it not a fact that this question arose after the Municipality had taken the place into the limits of the Municipality and after the Municipality wanted to prohibit the Muslims from burying the dead bodies in that place, the long used Karaparamba ground?

THE HON. SRI A. B. SHETTY: Two of the plots referred to were purchased by the Muslims, one in 1947 and another in 1952. It is only one of the plots which was being used as a burial ground. I hope, Sir, the hon. Member will see the desirability of not using places in crowded residential areas as burial grounds.

Scheduled Tribes, Coimbatore district 9-20 a.m.

* 3419 *Q.*—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state the amount allotted for the uplift of the Scheduled Tribes living in Coimbatore district during 1954–55 by—

(i) the Madras State Government, and

(ii) the Harijan Welfare Department, Madras?

THE HON. SRI B. PARAMESWARAN: This Government allotted Rs. 23,079 for the uplift of Scheduled Tribes in the Coimbatore district. Out of this allotment a sum of Rs. 15,079 was to be spent by the Harijan Welfare department.

SRI P. G. MANICKAM: கோயம்பத்தூர் ஜில்லாவில் மலைப் பிரதேசத்திலே ஆதிவாசிகள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் மலபார் ஜில்லாவோடு சேர்ந்திருக்கிறார்கள். மற்றொரு பகுதியினர் இந்தப் பகுதியிலுள்ள ஹரிஜனங்களோடு சேர்ந்திருக்கிறார்கள். கோயம்பத்தூர் ஜில்லா ஆதிவாசிகளின் கணக்கை எடுத்து, தனியாக

அவர்களை எல்லாம் வோட்டர் லிஸ்டில் சேர்ப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ? இதைப்பற்றி அனேக விண்ணப்பங்கள் முன்பு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றை சர்க்கார் கவனிக்குமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அரசாங்கத்தார் இந்த விண்ணப்பங்களை எல்லாம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

SRI M. DHARMALINGAM : Sir, may I know from the Hon. Minister whether he is aware of the fact that there is a section of people called 'Kuravarkal' and 'Kurivikkararkal' and may I know whether they are included in the list of Scheduled Tribes? If so, what sort of aid is given to them for rehabilitation? If not, will Government consider the necessity of recommending to the Government of India for including them in the list and giving them assistance for rehabilitation?

THE HON. SRI B. PARAMESWARAN : They are getting all the benefits that are given to the Scheduled Castes.

SRI A. M. RATNASWAMY : Sir, in view of the deplorable conditions in which the Scheduled Tribes live not only in the Coimbatore district, but also in the rest of the State and particularly in Malabar district, have the Government any scheme readily available with them for tackling the housing and educational problems of these people? May I also know whether the Central Government has promised any financial assistance in tackling the above problems of these Scheduled Tribes?

THE HON. SRI B. PARAMESWARAN : As a matter of fact the Government of India have also given assistance and the Government of Madras also are spending a lot of money on the uplift of Scheduled Tribes. If the hon. Member would wait for some more time, I would explain the details of the measures taken on behalf of these communities.

SRI S. DAIVASIGAMONEY : May I know from the Hon. Minister whether any authoritative census has been taken of the number of Scheduled Tribes and may I also know how many sub-divisions are there in Coimbatore district?

THE HON. SRI B. PARAMESWARAN : Sir, I can answer only so far as the Coimbatore district is concerned; statistics are being taken.

SRI P. VENKATESHA SHOLAGAR : ஆதிவாசிகள், நரிக்குறவர்கள் என்று சொல்லப்படுகிற ஜனங்கள், எங்கள் பக்கத்தில் உழைத்துச் சாப்பிட முன்வருகின்றனர். உழைப்பு கிடைக்காததினால் பிச்சை வாங்கி சாப்பிடும் நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் எங்கே தங்கி வசித்தாலும் கூட அவர்களை வோட்டர் லிஸ்டில் சேர்த்து, அவர்களுக்கு எல்லாம் வோட்டுரிமையை அளிக்க சர்க்கார் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அவர்கள் சில இடங்களில் தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களை ஒரே இடத்தில் தங்கி வாழும்படி செய்வது சிரமமாக இருக்கிறது. அதனால் வோட்டர் லிஸ்டிலும் சேர்ப்பது கஷ்டமாக இருக்கிறது.

15th March 1956]

SRI P. G. MANICKAM : கோயம்பத்தூர் ஜில்லாவில் ஆதிவாசி களுக்காக சர்க்கார் பல நல்ல காரியங்களைச் செய்துவருகிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஆனால் ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை எடுத்து அவர்களுடைய நலனுக்காக செலவழித்துக்கொண்டு வருகிறார்கள். அதனால் ஹரிஜனங்களுக்குச் செய்யப்படவேண்டிய வசதி கள் குறைகின்றன. ஆகையால் அந்த ஜில்லாவிலுள்ள ஆதிவாசிகளின் கணக்கை தனியாக எடுத்து, அவர்களுக்காக என்று சர்க்கார் பணம் தனியாக ஒதுக்கி அவர்களுடைய நலனுக்குச் செலவழிக்கவேண்டுமென் றும், ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் ஹரிஜனங்களுக்கே செல வழிக்கப்படவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN : கோயம்பத்தூர் ஜில்லாவி லுள்ள ஆதிவாசிகளின் தொகை எவ்வளவு என்பது அரசாங்கத்தாருக்குத் தெரியும். தற்போது வந்து குடியேறியவர்கள் கொஞ்சம் இருக்கலாம். ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தை எடுத்து அவர்களுக்குச் செல வழிக்க முடியாது. அப்படிச் செலவழித்தாலும் அக்கவுண்டெண்ட்-ஜெனரல் ஒத்துக்கொள்ளமாட்டார். அப்ஜெக்ஷன் கிளப்பிவிடுவார்.

SRI M. DHARMALINGAM : Sir, the Hon. Minister replied that the concessions were given to Kurivikkararkal as in the case of Scheduled Tribes. May I know whether the Hon. Minister is in a position to give particular instances, particular places and the number of persons for whom Government have given aid or concessions?

THE HON. SRI B. PARAMESWARAN : Does the hon. Member want the information with regard to Coimbatore or any other district? Whatever it is, I will give the information when I reply to the debate on Harijan uplift.

SRI N. C. RAMASAMY KANDER : அவரவர்களுக்கு ஒதுக்கப் படும் பணம் அவரவர்களுக்குச் செலவு செய்யப்படுவதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். கோயம்பத்தூர் ஜில்லாவில் ஆதிவாசிகள் என்ற நரிக்குறவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் எவ்வளவு ?

THE HON. SRI B. PARAMESWARAN : நரிக்குறவர்கள் வேறு. ஆதிவாசிகள் வேறு. வட ஆற்காட்டிலுள்ள நரிக்குறவர்களுக்கு வீடுகட்டித் தரவேண்டுமென்று திட்டம் போட்டோம். ஆனால் அவர்கள் திடீரென்று மறைந்துவிட்டார்கள். அவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு. அவர் களுக்கு ஏதாவது நன்மை செய்யவேண்டுமென்று சர்க்கார் விரும்பினு லும்கூட அவர்கள் எல்லோரும் ஒரு இடத்தில் தங்கி வாழும் மனப்பான்மை அற்றவர்களாக இருக்கிறார்கள்.

SRI N. C. RAMASAMY KANDER :. செங்கம் தாலுகாவில் நரிக்குறவர்கள் ஒரு இடத்தில் தங்கி விவசாயத் தொழில் செய்துவருகிறார் கள். அங்கே அவர்கள் வீடு கட்டிக்கொள்ளவும் முயற்சிக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவியை அளிக்கவேண்டுமென்று நாங்கள் சர்க்காருக்கு விண்ணப்பம் போட்டிருக்கிறோம். அதை கவனித்து சர்க்கார் ஆவன செய்வார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அவர்கள் எல்லோரும் ஒரு இடத்தில் தங்கி வாழும் மனப்பான்மை உடையவர்களாக இருந்தால், அவர்களுக்கு வேண்டிய வசதியைச் சர்க்கார் செய்யும்.

SRI V. BALAKRISHNAN : கனம் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும் காலங்களில் நரிக் குறத்திகளை அணுகி, அவர்கள் எல்லோரையும் ஒரேயிடத்திலேயே தங்கி வாழும்படி உபதேசம் செய்ய முயல்வார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : நரிக் குறத்திகளிடம் மட்டும் அல்ல, எல்லோருக்கும் வேண்டிய உதவியைச் செய்ய நான் தயாராய் இருக்கிறேன்.

SRI E. L. RAGHAVA MUDALIAR : வடாற்காட்டிலுள்ள நரிக் குறவர்களுக்கு வீடு அமைக்கும் திட்டம் போட்டிருந்தபோது, அவர்கள் திடீரென்று மறைந்துவிட்டார்கள் என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் வடாற்காடு ஜில்லாவிலேயே இருக்கிறார்களா அல்லது வேறு ஜில்லாவிற்கே போய்விட்டார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அவர்கள் அங்கேயும் இருக்கலாம், வேறு பகுதிகளுக்குப் போயும் இருக்கலாம். அவர்களை எல்லாம் ஒன்று சேர்ப்பதுதான் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஸ்ரீ ராமசாமி கந்தர் போன்றவர்கள் அவர்களை ஒரேயிடத்தில் தங்கி வாழும்படி செய்தால் அவர்களுக்கு வேண்டிய உதவியை அளிக்கமுடியும்.

SRI K. ARANGANATHAN : காட்டை நம்பி வாழ்கின்ற இருளர் என்ற ஜாதிக்கு அரசாங்கம் ஏதாவது செய்து இருக்கிறார்களா ? அப்படி இருந்தால் என்ன செய்திருக்கிறார்கள். ?

THE HON. SRI B. PARAMESWARAN : அவர்களுக்குச் செய்திருக்கக்கூடிய நன்மைகளை எல்லாம் பற்றி புள்ளி விவரங்களோடு நான் இது சம்பந்தமான மானியத்திற்குப் பதில் அளிக்கும்போது சொல்கிறேன்.

SRI A. GOVINDASWAMY NAYAGAR : மலைகளில் வசிக்கக்கூடிய கள்ளர் முதலிய வகுப்பார் போக்குவரத்து வசதியின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு ரோடு போட்டுக் கொடுக்க ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : இந்தக் கேள்வி கோயம்பத்தூர் ஜில்லாவிலுள்ள ஆதிவாசிகளைப்பற்றியது. இதில் போய், கள்ளர், நரிக்குறவர், இருளர் முதலிய ஜாதியார்களைப்பற்றியும், இதர ஜில்லாக்களைப் பற்றியும் கேள்வி கேட்டால் நான் எப்படிப் பதில் சொல்வது. ? இது சம்பந்தமான மாணியம் இன்றைக்கு விவாதத்திற்கு வர இருக்கிறது. அது சம்பந்தமான விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது நான் விரிவாக எல்லாவற்றுக்கும் புள்ளி விவரங்களோடு பதில் சொல்கிறேன்.

SRI M. KATTIMUTHU : நரிக் குறவர்கள் என்ற ஜாதியார்கள் பல இடங்களில் எச்சில் இலையை நக்கித் தின்னக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இது இந்த மனித சமுதாயத்திற்கே இழிவானது. அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சுகாதார அதிகாரிகளைக்கொண்டு கட்டுப்படுத்தி சர்க்கார் திட்டமாக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் ?

THE HON. SRI B. PARAMESWARAN : அவர்களுக்கு ஏதாவது நன்மை செய்யவேண்டுமென்பதற்காகத்தான் அவர்கள் எல்லோரையும் ஒரு இடத்தில் திரட்டி வாழ வழிவகை செய்யவேண்டுமென்று நான் சொல்கிறேன்.

SRI P. G. MANICKAM : கனம் அமைச்சர் அவர்கள் ஆதிவாசிகளுக்கு ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தை எடுத்துச் செலவு செய்வதில்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் ஆதிவாசிகள் இன்றைக்கு ஹரிஜனங்களுடைய ஜாப்தாவிலேயே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனைமலையிலிருந்து சத்தியமங்கலம் வரைக்கும் உள்ள ஆதிவாசிகள் ஹரிஜனங்களுடைய லிஸ்டிலேயே சேர்க்கப்பட்டிருப்பதால், ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் அவர்களுக்காகவும் செலவழிக்கப்படுகிறது. ஆகவே அவர்களுடைய கணக்கை தனியாகத் தயாரித்துவிட்டு அவர்களுடைய பெயரை ஹரிஜன லிஸ்டிலிருந்து எடுத்துவிடுவார்களா ?

15th March 1956]

THE HON. SRI B. PARAMESWARAN : எந்த எந்த இனத்திற்காக அரசாங்கம் பணம் ஒதுக்குகிறதோ, அந்த அந்த இனத்திற்காகவே செலவு செய்துவருகின்றது. ஆனல் பொதுவாக ஒதுக்கப்படும் பணத்தில் எல்லோருக்கும் பங்கு உண்டு.

SRI M. JAGANNATHAN : கனம் அமைச்சரவர்கள் பதில் கூறும் போது " நரிக் குறவர்களையெல்லாம் ஒன்று சேர்ப்பது சிரமமாக இருக்கிறது " என்று சொன்னர். நரிக் குறவர்களை ஒன்று சேர்ப்பதற்கு சர்க்கார் இது வரை என்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டார்கள் என்று கூறுவார்களா ? 9-30 a.m.

THE HON. SRI B. PARAMESWARAN : கூட்டுறவு இலாகா மூலமாக சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். பதினைந்து பேர்கள் ஒன்ருக இருந்தால்கூட அவர்களுக்குச் சிறு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். புள்ளி விவரம் வேண்டுமானுலும் அங்கத்தினருக்குக் கொடுக்கின்றேன். வீடு கட்டிக் கொடுத்தாலுங்கூட அவர்கள் அதே வீடுகளில் இருப்பது என்பது கஷ்டமாக இருக்கிறது.

SRI G. GOVINDAN : நரிக் குறவர்களை ஷெட்யூல் வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று சிலர் சொல்கிருர்கள். அவர்கள் வடநாட்டிலிருந்து வந்தவர்கள் என்றும், க்ஷத்திரியர்கள் என்றும் சிலர் சொல்கிருர்கள். அவர்களை எந்த ஜாதியில் சேர்ப்பது என்பது சந்தேகமாக இருக்கிறது.

THE HON. SRI B. PARAMESWARAN : ஜாதிகளுக்கு எண்ணிக்கையே இல்லை. ஜாதிகளைப்பற்றி பேசுவதைவிட வேறு எதைப்பற்றியாவது பேசுவது நல்லது என்று நான் நினைக்கின்றேன்.

SRI M. MARIMUTHU : நரிக் குறவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதைப்போல பஞ்சாயத்து போர்டுகளின் கீழ் தோட்டி வேலை செய்பவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் செய்வார்களா ? தோட்டிகளுக்கு வேண்டிய மனைக்கட்டுகளை ஒதுக்கித் தருவதற்கும் அமைச்சரவர்கள் வழி செய்வார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : கனம் அங்கத்தினர் கேட்பது கோயம்புத்தூர் ஜில்லாவைப்பற்றியா அல்லது வேறு எந்த ஜில்லாவைப்பற்றியா என்பது தெரியவில்லை.

SRI K. VINAYAKAM : நரிக் குறவர்களும் குருவிக்காரர்களும் இப்பொழுது நாடு முழுவதும் சுதந்தரமாகத் திரிந்து வாழ்கிருர்கள். அவர்களையெல்லாம் ஒன்றுபடுத்தி, அவர்களுக்கு வீடு கட்டித் தருகிறோம் என்று திட்டத்தையெல்லாம் வகுத்து, சட்டத்திற்கு உட்படுத்தி அவர்களை இம்சிக்கும் முயற்சியை இந்த அரசாங்கம் கைவிட்டுவிட்டு அவர்களைச் சுதந்தரமாக வாழவிடுவார்களா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும், அவர்களும் வசதி பெற்றவர்களாக வாழ வேண்டுமென்ற எண்ணத்தில் அரசாங்கம் வேலை செய்துவருகிறது. அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தத்தக்க காரியங்களைச் செய்துகொடுக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு வேண்டிய சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

SRI A. ARANGANATHAN : நாடோடி வாழ்க்கையை விட்டுவிட்டு ஒரே இடத்தில் நிரந்தரமாக வாழ விரும்பும் நரிக் குறவர்கள் தங்களுக்கு புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்து கொடுக்கவேண்டுமென்று ரெவினியூ அதிகாரிகளைக் கேட்டால், அம்மாதிரி ரெவினியூ அதிகாரிகள் வழங்கலாம் என்று அரசாங்கம் ரெவினியூ அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்புமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : கோரிக்கை வந்தால் அரசாங்கம் கட்டாயம் தாக்கீது அனுப்பும்.

[15th March 1956

Sri S. ARUMUGHAM : ஹரிஜனங்கள் என்றால் அதில் எந்தெந்த ஜாதியார் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சரவர்கள் தெரிவிப்பாரா ?

The Hon. Sri B. PARAMESWARAN : கனம் அங்கத்தினர் கேட்கக்கூடிய தகவல் என்னிடம் இப்பொழுது தயாராக இல்லை. தனி கேள்வி போட்டால் லிஸ்டு கொடுக்கிறேன்.

Prime Minister's tour of Malabar

* 3420 *Q.*—Sri V. R. KRISHNA IYER : Will the Hon. the Minister for Finance be pleased to state the total cost of the security arrangements made during the recent tour of the Prime Minister in Malabar district?

The Hon. Sri C. SUBRAMANIAM : An expenditure of Rs. 2,20,046 was incurred in all by the State Police Department on general bandobust arrangements for the maintenance of law and order and controlling the large crowds at the places visited by the Prime Minister in Coimbatore, Malabar and South Kanara districts. The above sum also includes expenditure incurred on security arrangements on the prescribed scale for the protection of the Prime Minister. It may not be possible to be exact in separating this particular item from the total and specify the amount but it will be only a small fraction of the whole amount.

Sri T. C. NARAYANAN NAMBIAR : Sir, have the Government received any representation or report from the public of Malabar district regarding the maltreatment and harassment by the police who were deputed for bandobust duty in Badagara and Kozhikode in Malabar district during the tour of the Prime Minister

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I would like to have notice.

State Harijan Advisory and Backward Classes Advisory Committees

* 3421 *Q.*—Sri K. ARANGANATHAN (on behalf of Sri A. Appu) : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) how often the State Harijan Advisory Committee and the State Backward Classes Advisory Committee normally meet in a year; and

(*b*) how many meetings of these Committees were held during the current year?

The Hon. Sri B. PARAMESWARAN : (*a*) The State Harijan Welfare Committee and the State Backward Classes Advisory Committee normally meet four times and two times respectively in a year.

(*b*) Two meetings of the State Harijan Welfare Committee and two meetings of the State Backward Classes Advisory Committee were held during the year 1955–56.